


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ பிப்ரவரி. 19, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 5 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 135 ❖ ரூ.5

## காவேரி கூக்குரல் மூலம் இந்தாண்டு 2.5 கோடி மரங்கள் நட திட்டம்

# விதை

### 20 ஆண்டு கால ஈஷாவின் சுற்றுச்சூழல் களப் பணியின் காரணமாக இதுவரை 6.5 கோடி மரக்கன்றுகள் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மூலம் நடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

சென்னை, பிப். 19:

கடந்த2019-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்ட இவ்வியக் கத்தின் மூலம் இதுவரை 2.10 கோடி மரக்கன்றுகளை விவசாயிகள் தங்கள் நிலங்களில் நடவு செய்து சாதனை படைத்துள்ளனர். அத்துடன், 1.25 லட்சம் விவசாயிகள் மரம்சார்ந்த விவசாய முறைக்கு மாறியுள்ளனர்.என்பது தற்போதைய சூழலில் ஆறுதல் தரும் செய்தியாக அமைந்திருக்கிறது.



இது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு சென்னை பிரஸ் கிளப்பில் நேற்று நடைபெற்றது.இதில் இவ்வியக்கத்தின் மாநில கள ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறன் பேசுகையில், “காவேரி கூக்குரல் இயக்கம் மூலம் இதுவரை 2.10 கோடி மரக்கன்றுகளை விவசாயிகள் நட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக, விழுப்புரம் மாவட்டத்தில் 1,700 விவசாயிகள் 6.33 லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளனர். அதற்கு அடுத்தப்படியாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் 1,600 விவசாயிகள் 5.29 லட்சம் மரக்கன்றுகளையும், சேலம் மாவட்டத்தில் 2,500 விவசாயிகள் 5.26 லட்சம் மரக்கன்றுகளையும் நட்டுள்ளனர். சென்னை சுற்றுவட்டார மாவட்டங்களில் 1,800 விவசாயிகள் 5.76 லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளனர்.

20 ஆண்டு கால ஈஷாவின் சுற்றுச்சூழல் களப்பணியின் காரணமாக இதுவரை 6.5 கோடி மரக்கன்றுகள் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மூலம் நடப்பட்டுள்ளது.இதற்கு முன்பு சத்குரு தொடங்கிய ‘நதிகளை மீட்போம் பாரதம் காப்போம்’ இயக்கமும் மக்களிடம் மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வெற்றி பெற்றது. அவ்வியக்கம் தயாரித்த நதிகளை புத்துயிரூட்டுவதற்கான விரிவான செயல்முறைகள் அடங்கிய 700 பக்க வரைவு அறிக்கையை மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் அதை செயல்படுத்துமாறு பரிந்துரைத்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, சத்தீஸ்கர், உத்தரகாண்ட், ஒரிசா, மஹாராஷ்ட்ரா, பஞ்சாப் மற்றும் கர்நாடகா ஆகிய 6 மாநிலங்கள் இப்பரிந்துரைகளை தங்கள் மாநிலத்தில சொந்தமாக செயல்படுத்தி வருகின்றன” என்றார்.

திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி தெய்வசிகாமணி பேசுகையில், “நான் 15 ஏக்கரில் மரங்களுக்கு இடையில் விவசாயம் செய்து வருகிறேன். அதிலும் குறிப்பாக பழ மரங்களையும் டிம்பர் மரங்களையும் சேர்த்து வளர்த்து வருகிறேன். பழ மரங்களில் இருந்து வருடந்தோறும் வருமானம் வருகிறது. டிம்பர் மரங்கள் நீண்ட கால முதலீடாகவும் உள்ளது. ஈஷா நர்சரிகளில் பல ஆண்டுகளாக மரக்கன்றுகளை எடுத்து நட்டு வருகிறேன். தரமான மரக்கன்றுகள் குறைந்த விலையில் கிடைப்பதால் எளிய விவசாயிகளும் பயன்பெறுகின்றனர். எங்கள் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள ஏராளமான விவசாயிகள் காவேரி கூக்குரல் இயக்கத்தின் மூலம் பயன்பெற்றுள்ளனர்” என்றார்.

செய்யூர் தாலுகாவைச் சேர்ந்த விவசாயி விமல்தாஸ் பேசுகையில், “சத்குருவின் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் காரணமாக தரிசாக கிடந்த எனது 25 ஏக்கர் நிலத்தில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மரங்கள் நட தொடங்கினேன். காவேரி கூக்குரல் இயக்கத்தின் களப்பணியாளர்கள் தண்ணீர் வசதி குறைவான என் நிலத்தை நேரில் வந்து ஆய்வு செய்தனர். தண்ணீரையும், மண்ணின் தன்மையும் ஆய்வு செய்து அதற்கேற்ற மரங்களை பரிந்துரைத்து நட செய்தனர். இதன்மூலம், எதிர்காலத்தில் நிலத்துடன் சேர்த்து டிம்பர் மரங்கள் மூலம் கோடிக்கணக்கான வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது” என்றார்.






# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,729 | Rs.5,095 |

## வரலாற்றில் இன்று



1884 60 இற்கும் மேற்பட்ட சுழல் காற்றுகள் ஐக்கிய அமெரிக்காவின் தெற்குப் பகுதிகளைத் தாக்கின.

1913 பெத்ரோ லாசுகுராயின் மெக்சிக்கோவின் அரசுத்தலைவராக 45 நிமிட நேரம் மட்டும் பதவியில் இருந்தார். உலகில் மிகக் குறைந்த நேரம் பதவியில் இருந்த அரசுத்தலைவர் இவரே.

1915 முதலாம் உலகப் போர்: தார்தனெல்சு நீரிணை மீதான முதலாவது கடற்படைத் தாக்குதல் ஆரம்பமானது. ஆங்கிலோ-பிரெஞ்சுக் கூட்டுப் படைகள் உதுமானியப் படைகள் மீது கலிப்பொலி கரையோரப் பகுதிகளில் குண்டுகளை வீசின. கலிப்பொலி போர் ஆரம்பமாயிற்று.

1942 இரண்டாம் உலகப் போர்: சப்பானிய அமெரிக்கர்களை இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்க அமெரிக்கத் தலைவர் பிராங்க்ளின் ரூசவெல்ட் உத்தரவிட்டார்.

1942 இரண்டாம் உலகப் போர்: கிட்டத்தட்ட 250 சப்பானியப் போர் விமானங்கள் ஆத்திரேலியாவின் வட மண்டலத்தின் தலைநகர் டார்வின் மீது குண்டுகளை வீசியதில் 243 பேர் கொல்லப்பட்டனர்.

1943 இரண்டாம் உலகப் போர்: தூனிசியாவில் கேசரைன் கணவாய் சண்டை ஆரம்பமானது.

1945 இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை: 30,000 ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் சப்பானின் இவோ ஜீமா தீவில் தரையிறங்கினர்.

1948 விடுதலைக்காகப் போராடும் தென்கிழக்காசியாவின் இளையோர் மற்றும் மாணவர் மாநாடு கல்கத்தாவில் ஆரம்பமானது.

1954 கிரிமியாவை உருசிய சோவியத் குடியரசில் இருந்து உக்ரைன் சோவியத் குடியரசிற்கு கையளிக்க சோவியத் உயர்பீடம் முடிவெடுத்தது.

1959 ஐக்கிய இராச்சியம் சைப்பிரசுக்கு விடுதலையை வழங்கியது. சைப்பிரசு அதிகாரபூர்வமாக 1960 ஆகத்து 16 இல் விடுதலை பெற்ற நாடாகியது.

1965 வியட்நாம் குடியரசு இராணுவத் தளபதி பாம் ஙொக் தாவோ, வடக்கு வியட்நாம் வியட் மின் கம்யூனிச உளவாளியுடன் இணைந்து (அனைவரும் கத்தோலிக்கர்கள்) தெற்கு வியட்நாமில் பௌத்தரான நியூவென் கானின் ஆட்சிக்கு எதிராக இராணுவப் புரட்சியை நடத்தித் தோல்வியடைந்தனர்.

### அறந்தாங்கி அருகே தட்டான்வயல் கிராமத்தில்

## மாசிமக திருவிழாவை முன்னிட்டு மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது



அறந்தாங்கி , பிப்.19-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே தட்டான்வயல் கிராமத்தில் அமைந்து அருள்பாலித்துவரும் ஸ்ரீ முத்துமுனீஸ்வர் ஸ்ரீ தில்லைமாகாளியம்மன் ஆலய மாசிமக உற்சவத்தை முன்னிட்டு 42ம் ஆண்டு மாட்டு வண்டி எல்கைப்பந்தையம் நேற்று நடைபெற்றது.

இந்தாண்டு நடைபெற்ற மாட்டு வண்டி எல்கைபந்தயத்தில் நாகை, புதுக்கோட்டை , தஞ்சை, ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து 111 ஜோடி மாடுகள் போட்டியில் பங்கேற்றன. தட்டான்வயல் கடைவீதியிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரம் பந்தயத்திற்கு எல்லை வகுக்கப்பட்டிருந்தது. இதில் பெரியமாடு, நடுமாடு, கரிச்சான், பூஞ்சிட்டு மாடு என 4 பிரிவுகளாக பந்தயம் நடைபெற்றது.

பெரிய மாடு பிரிவில் 10ஜோடி மாடுகளும், நடுமாடு பிரிவில் 15ஜோடி மாடுகளும் கரிச்சான்மாடு பிரிவில் 32ஜோடி பூஞ்சிட்டு 54மாடுகளும் பந்தயத்தில் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்தன. பந்தயத்தில் சீறிப்பாய்ந்து வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரொக்கப்பணம், நினைவுக் கோப்பைகள் பரிசாக வழங்கப்பட்டது. மேலும் மாடுகளை சிறப்பாக ஓட்டி வந்த சாரதிகளுக்கு கொடிப்பரிசு மற்றும் கோப்பைகள் கொடுத்து கௌரவப்படுத்தினர் நிகழ்ச்சியை ஏராளமான பொதுமக்கள், ரசிகர்கள் கண்டுகளித்தனர். 20க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.




## கோவையில் வாக்காளர்களுக்கு பணம், அண்டா உள்ளிட்டவை வழங்கல்: கமல்ஹாசன் குற்றச்சாட்டு



கோவை , பிப்.19-

கோவையில் வாக்காளர்களுக்குப் பணம், அண்டா, ஹாட் பாக்ஸ் வெள்ளிக்கொலுசு உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டுள்ளது. என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் கோவை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் நேற்று புகார் அளிக்கப்பட்டது. அந்த புகார் மனுவில் இன்று நடக்க இருக்கும் உள்ளாட்சித் தேர்தல் நடைமுறைக்கு கட்டுப்படாமல் திமுக மற்றும் அதிமுக வேட்பாளர்கள் பல இடங்களில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்குகின்றனர். எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல் நேரடியாகவே வழங்குகிறார்கள்.

இது தேர்தல் விதிமுறை சட்டப்படி குற்றச் செயலாகும். பல அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை மேலும் கோவை மாநகர் முழுவதும் நாளிதழ் ஒன்றின் சுவரொட்டி திமுகவிற்கு ஆதரவாக ஒட்டப்பட்டுள்ளது. இது தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புக்கு சென்னை உயர்நீதிமன்றம் கடந்த தேர்தலில் தடைவிதித்துள்ளது. ஆகையால் மேற்கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணைத் தலைவர் தங்கவேல் அளித்துள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதுக்கோட்டை பேராங்குளத்தில் நள்ளிரவில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட

## பெண் ஆசிரியர்கள் பாதுகாப்புடன் வீட்டிற்கு அனுப்பி வைத்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்



புதுக்கோட்டை, பிப்.19-

இணையதளத்தில் ஆசிரியர்கள் விவரங்கள் பதிவேற்ற குறைபாடு மற்றும் தொழில்நுட்ப குறைபாடு காரணமாக கலந்தாய்வு பிப்ரவரி 23ஆம் தேதி நடைபெறும் என்ற பள்ளிக் கல்வித்துறையின் அறிவிப்பால் கலந்தாய்விற்கு வந்திருந்த பெண் ஆசிரியர்கள் மனவேதனைக்குள்ளாகி நள்ளிரவில் கலந்தாய்வு நடைபெற்ற பேராங்குளம் தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்தி நள்ளிரவு 1 மணி வரை கல்வித்துறை உயர் அலுவலர்களுடன் தொடர்ந்து பேசினார். அதனைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களிடம் வரும் பிப்ரவரி 23 அன்று 100 % பணிகள் முடிக்கப்பட்டு கலந்தாய்வு தடையின்றி நடைபெறும் என்றும் இனிவரும் நாட்களில் கலந்தாய்வு நிகழ்வுகள் இரவு நேரம் வரை தொடராமல் காலத்தோடு முடிக்கப்படும் என்றும் நம்பிக்கைதந்து உள்ளிருப்பு போராட்டத்தை முடித்து வைத்தார்.

பின்னர் கலந்தாய்விற்கு வந்திருந்த பெண் ஆசிரியர்களின் சிரமங்களை புரிந்து கொண்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்தி தனது அலுவலக வாகனத்தில் பேருந்து நிலையம் வரை பாதுகாப்பாக அனுப்பி வைத்து அனைவரும் சென்ற பிறகு கலந்தாய்வு நடைபெற்ற மையத்திலிருந்து புறப்பட்டார்.



▶ நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவை முன்னிட்டு மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு வாகனங்கள் மூலம் காவல்துறை பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான அனிஷ் சேகர், மதுரை மாவட்டத்திற்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பார்வையாளர் கமல் கிஷோர் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். உடன் மாநகராட்சி ஆணையாளர் கார்த்திகேயன் உள்ளார்

## நாகையில் தந்தை மகள்கள் மற்றும் மனைவியை கொலை செய்து தானும் தற்கொலை



நாகப்பட்டினம் பிப்.19-

நாகப்பட்டினத்தை சேர்ந்த தம்பதிகள் லட்சுமணன் - புவனேஸ்வரி. இவர்களுக்கு 3 மகள்கள் உள்ளனர். லட்சுமணன் ஓட்டல் வைத்து நடத்தி வந்தார். இந்த நிலையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு மூத்த மகள் தனலட்சுமி காதல் திருமணம் செய்து கொண்டு தனியாக வாழ்ந்து வந்துள்ளார். இந்த சம்பவத்தை தொடர்ந்து லட்சுமணன் மிகுந்த மன உளைச்சலில் காணப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. பின்னர் உணவக்தை திறக்காமல் வீட்டில் வைத்தே உணவகம் நடத்தி வந்துள்ளார்.

ஆனால் கடந்த 4 நாட்களாக லட்சுமணன் கடையை திறக்காமல் இருந்துவந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு வீட்டில் இருந்த லட்சுமணன் தனது மனைவி புவனேஸ்வரி(45) இரண்டு மகள்கள் வினோதினி(18), அக்சயா(15) ஆகியோர்கள் தலையில் குழவி கல்லை போட்டு கொலை செய்துவிட்டு தானும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது குறித்து அறிந்த மாவட்ட சூப்பிரண்ட் ஜகவர் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினார். இந்த சம்பவம் குறித்து வழக்குபதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மனைவி, மகள்களை கொலை செய்து ஓட்டல் உரிமையாளர் தானும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டு சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



▶ புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தலில் வாக்குச்சாவடி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் பார்வையாளர் மோனிகா ராணா, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு ஆகியோர் புதுக்கோட்டை நகராட்சி அலுவலகத்திலிருந்து வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை நேற்று பார்வையிட்டனர்.

## அரியலூர் அருகே இந்திய குடியரசு கட்சி செயற்குழுக் கூட்டம்



அரியலூர் பிப். 19-

அரியலூர் அருகே, இந்திய குடியரசு கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அரியலூர் அருகே நாகமங்கலம் கிராமத்தில் நடைபெற்ற இந்திய குடியரசு கட்சியின் அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டத்திற்கு அக்கட்சியின் மாவட்ட தலைவர் ராஜீவ் காந்தி தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் பிரசாத் வரவேற்று பேசினார்.

இந்திய குடியரசு கட்சி அரியலூர் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரியலூர் மாவட்டம், தா பழூர் ஊராட்சி ஒன்றியம், கோரைகுழி கிராமம், அருந்ததியர் தெருவில் பல மாதங்களாக உள்ள குடிநீர் தட்டுப்பாட்டை போக்க ஊராட்சி நிர்வாகம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரியலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியத்திருக்கோணம் பஞ்சாயத்திற்குட்பட்ட செட்டித்திருக்கோணம் காமராஜபுரத்தில், இடிந்து விழுந்த தரைபாலத்தை விரைவில் கட்ட வேண்டியும், சுடுகாட்டிற்கு செல்லும் பாதையை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைக்க வேண்டும்.

தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், கடம்பூர் முதல் அறக்கட்டளை கிராமம் வரை செல்லும் சாலை, பழுதடைந்த நிலையில் உள்ளதால், அதை சீரமைத்து தார்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. திருமானூர் ஊராட்சி ஒன்றியம் , காமரசவல்லி கிராம பேருந்து நிற்கும் இடத்தில், பேருந்து நிழற்குடை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாகமங்கலம் கிராமத்திலுள்ள அடிப்படை பிரச்சினைகள் குறித்து, மாவட்ட ஆட்சியர், அரியலூர் சட்ட மன்ற உறுப்பினர் ஆகியோரிடம் கொடுத்த புகார் மனு மீது விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக்கொள்வது. உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்ட முடிவில் தா பழூர் ஒன்றிய செயலாளர் பாலமுருகன் நன்றி தெரிவித்தார்.

## திருச்சி – காரைக்குடி புதிய மின் மயமாக்கப்பட்ட ரயில் பாதையை தென்சரக ரயில்வே பாதுகாப்பு: ஆணையர் ஆய்வு செய்தார்



புதுக்கோட்டை, பிப்.19:

திருச்சி காரைக்குடி இடையே 89 கிமீ ரயில் பாதை ரூபாய் 90 கோடி செலவில் மின் மயமாக்கப் பட்டுள்ளது.

இந்த புதிய மின் மயமாக்கப்பட்ட ரயில் பாதையை தென் சரக ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அபய்குமார் ராய் ஆய்வு செய்தார். பாதுகாப்பு ஆணையரது ஆய்வு ரயில் திருச்சியில் இருந்து புறப்பட்டது. முதலில் திருச்சி குமாரமங்கலம் புதூர் அய்யம்பட்டி, வெள்ளனூர் காவேரிநகர் ரயில்வே கேட்கள், குமாரமங்கலம், புதுக்கோட்டை ரயில் நிலையங்கள், கீரனூர் அருகே குறுக்கிடும் மின் வழித்தடம், கீரனூர், நமணசமுத்திரம் உபமின் நிலையங்கள், புதுக்கோட்டை தாவூத்மில் கிராமம் அருகே உள்ள ரயில்வே மேம்பாலம், பாம்பாறு ரயில் பாலம் ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆய்வில் ரயிலை நிறுத்தி ஆய்வு செய்தார்.

ஆய்வு ரயில் காரைக்குடி ரயில் நிலையத்திற்கு வந்தது. காரைக்குடி ரயில் நிலையத்தில் 25,000 வாட்ஸ் மின்சாரம் பாய்ச்சப்படும் ரயில் பாதை பகுதிகளை பொதுமக்கள், பயணிகள் நெருங்க வேண்டாம் என எச்சரிக்கை விளம்பரங்கள் வைக்கப்பட்டுள்ளதா? என ஆய்வு செய்தார். ரயில் பாதை பராமரிப்புப் பணியாளர்கள் மின் ரயில் பாதையில் பணியாற்றுவதற்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா? என பணியாளர்களை கேட்டு தெரிந்து கொண்டார். தொடர்ந்து மின்சார இன்ஜின் பொருத்திய ரயிலில் காரைக்குடியில் இருந்து புறப்பட்டு திருச்சி வரை வேக சோதனை ஓட்டம் நடத்தி ஆய்வு செய்தார். பாதுகாப்பு ஆணையருடன் முதன்மை மின்சாரப் பொறியாளர் ராஜமுருகன், மின்மயமாக்கல் திட்ட இயக்குனர் சமீர்டிஹே, மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் பத்மநாபன் அனந்த் ஆகியோர் உடன் சென்றனர்.



## ஆரணி பேரூராட்சி அலுவலகத்தில் இருந்த மின்னணு வாக்கு இயந்திரங்கள் வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது



ஊத்துக்கோட்டை, பிப்19–

திருவள்ளூர் மாவட்டம்,சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி மன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது. இந்த பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளுக்கு 5 வாக்கு மையங்களில் 15 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்காளர்கள் வாக்களிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஆரணி பேரூராட்சி அலுவலகத்தில் போலீஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த மின்னணு வாக்கு இயந்திரங்கள் மற்றும் பாதுகாப்பு கருவிகள் நேற்று வட்டார தேர்தல் பார்வையாளர் ச.நந்தினி முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர் கலாதரன் தலைமையில், மண்டல அலுவலர்கள் சிவக்குமார், திருக்குமரன், உதவித் தேர்தல் அலுவலர்கள் நித்தியானந்தம், தர்மலட்சுமி ஆகியோர் அந்தந்த வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

## சென்னை டெக்ஸ்டைல்ஸ் வியாபாரிகள் நலசங்கம் சங்கத்தலைவர் பட்டவெட்டி டீ.உதயராஜ் 57வது பிறந்தநாள் விழா



சென்னை , பிப்.19–

சென்னை சிங்காரத்தோட்டம் 6வது சந்தில் சிங்காரத்தோட்டம் டெக்ஸ்டைல்ஸ் வியாபாரிகள் நலசங்கம் சங்கத்தலைவர் பட்டவெட்டி டீ.உதயராஜ் 57வது பிறந்தநாள் விழா பட்டாசு வெடித்து, கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி வெகுசிறப்பாக கொண்டாடபட்டது.

பிறந்தநாள் விழாவில் சிறப்பு அழைப்பாளராக ராயபுரம் காவல் ஆய்வாளர் பூபாலன் வருகைதந்து சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தார். பிறந்தநாள் விழாவில் பொருளாளர் விஷ்வநாதன், செயலாளர் ஜெயபால்,இணைதலைவர் இஸ்மாயில், இணை செயலாளர் இஸ்மாயில், கௌரவ ஆலோசகர் மொய்தீன்,துணைதலைவர் சுந்தர்ராஜன், கௌரவ தலைவர் நீரஜ்,மோத்தி ஆகியோர் விழா ஏற்பாடுகளை வெகுசிறப்பாக செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் வியாபாரிகள், சங்க உறுப்பினர்கள்,சுமைதூக்கும் தொழிலாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலர் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர். பிறந்தநாள் விழாவில் அறுசுவை உணவு பிரியாணி வழங்கபட்டது.

## நியாயம் வேண்டி மாவட்ட ஆட்சியரின் காலில் விழுந்து கதறி அழுத பெண்



திருவள்ளூர் , பிப்.19–

நியாயம் வேண்டி மாவட்ட ஆட்சியரின் காலில் விழுந்து கதறி அழுத ஹேமமாலினியின் பெரியம்மா கோவிலுக்கு பூஜைக்கு சென்ற தன் மகளை பூசாரி கொன்று விட்டதாக கூறி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஹேமமாலினி பெரியம்மா மாவட்ட ஆட்சியர் காலில் விழுந்து கதறி அழுதது காண்போர் நெஞ்சை உருக செய்தது.

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி அடுத்த வெள்ளத்துக்கோட்டை பகுதியில் உள்ள கோவிலுக்கு செம்பேடு பகுதியைச் சேர்ந்த ஹேமமாலினி (20) கல்லூரி மாணவி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் கடந்த 13ஆம் தேதி நல்லிரவு பூஜைக்காக கோவிலுக்கு சென்றுள்ளார்.

மறுநாள் 14ஆம் தேதி விடியற்காலை அவர் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில். பூசாரி முனுசாமி அவர் மனைவி மீது ஹேமாமாலினி தந்தை ராமகிருஷ்ணன் பென்னலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

இந்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்து தனிப்படை அமைத்து பூசாரி முனுசாமி அவருடைய மனைவியை தேடி வருகின்றனர். இந்நிலையில் தன் மகளை பூசாரி கொன்று விட்டதாகவும் தங்களுக்கு நியாயம் வேண்டி கல்லூரி மாணவி குடும்பத்தினர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க நேற்று வந்து காத்திருந்தனர்.

மாவட்ட ஆட்சியர் தேர்தல் வேலையாக வெளியில் சென்று ஆட்சியர் அலுவலகம் வந்தவுடன் உயிரிழந்த ஹேமமாலினி குடும்பத்தினர் மாவட்ட ஆட்சியரின் காரை வழிமறித்து அவரின் காலில் விழுந்து தனது பெண்ணுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் பூசாரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் கோவிலில் உள்ள 50 பெண்களையும் காப்பாற்ற வேண்டும் என்றும் பென்னலூர் பேட்டை காவல்துறையினர் தான் கொடுக்கும் புகாரை கூட ஒழுங்காக அவர்கள் வாங்காமல் தங்களை திட்டுவது ஆகும். ஏழைப்பட்ட எனது மகள் படித்து ஆளாக கூடாதா இதனால் மாவட்ட ஆட்சியர் நீங்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி உயிரிழந்த ஹேம மாலினியின் பெரியம்மா இந்திராணி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் காலில் விழுந்து கதறி அழுதது பார்ப்பவரை நெஞ்சை உருக செய்தது.

## மீமிசல் அருகில் தெருநாய்கள் கடித்து புள்ளிமான் இறந்தது



ஆவுடையார் கோவில், பிப்.19:

புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல் அருகில் ஆர் புதுப்பட்டிணம் கிராமத்தில் கடந்த இரண்டு நாட்களாக வயல்வெளியில் மேய்ந்துக்கொண்டிருந்த புள்ளிமானை தெரு நாய்கள் துரத்தி சென்று கடித்ததால் அந்த புள்ளிமான் உயிரிழந்தது.

மீமிசல் ஹெச்.பி கேஸ் குடோன் பின்புறம் மயங்கிய நிலையில் இருந்த புள்ளிமானை கண்ட பொதுமக்கள் அதனை மீட்டு வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். ஆனால் வனத்துறை அதிகாரிகள் வருவதற்கு முன்பே புள்ளிமான் இறந்து விட்டது.

இறந்தநிலையில் இருந்த புள்ளிமான் உடலை வனச்சரக அலுவலர் மீட்டு உடற்கூராய்வு செய்து அடக்கம் செய்தனர்.






நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் நாம் தமிழர் கட்சி சார்பாக 15 வார்டுகளில் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். போட்டியிடும் வேட்பாளர்கள் இளையராஜா, கண்ணகி, லதா, முத்துக்குமார், அப்துல்வாஷித், பொன்னரசி, கோயிராஜ், சரளாதேவி, தமிழ்செல்வி, சௌபானு, சிவசங்கரன், விமல்ராஜ், சிக்கந்தர், சையத், சகாபுதீன் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் இரு சக்கர வாகனப் பிரச்சாரம் மேற்கொண்டு பொதுமக்களிடையே வாக்கு சேகரித்தனர்.

## 100% வாக்களிப்பது குறித்து மாவட்ட கலெக்டர் விழிப்புணர்வு



திருவள்ளூர், பிப். 19

வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமை அதைதிருவள்ளூர்மாவட்ட மக்கள் தனது ஜனநாயக கடமையை 100% செய்ய வேண்டும். திருவள்ளூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் ஆல்பிஜான் வர்கிஷ் வேண்டுகோள்.

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட வி எம் நகர் பகுதியில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ஆட்சியர் ஆல்பிஜான் வர்கிஷ் மற்றும் மாவட்ட தேர்தல் பார்வையாளர் கணேசன் வார்டுகளில் உள்ள விடுகளுக்கு சென்று பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் வாக்கு மையங்களில் கேமரா வசதி உள்ளிட்ட வசதிகள் உள்ளதா என்பதை நேரில் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்தல் நேரத்தில் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் தமது அனைத்து ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்,தேர்தல் நேரத்தில் ஏதேனும் புகார்கள் இருந்தால் அதற்காக அளிக்கப்பட்டுள்ள டோல் ஃப்ரீ எண்ணுக்கு18005997626 தகவல் கொடுக்கவேண்டும்,

அதேபோன்று வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமை அதை 100 சதவீதம் வாக்களித்து தனது ஜனநாயக கடமையை செலுத்த வேண்டுமென மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மாவட்ட ஆட்சியர் ஆல்பிஜான் வர்கீஸ் கோரிக்கை விடுத்தார். உடன் திருவள்ளூர் நகராட்சி தேர்தல் நடத்தும் அலுவலர் உடனிருந்தார்






சென்னையில் 19.2.2022 முதல் 20.2.2022 வரை நடைபெற உள்ள 14 வயதிற்குட்பட்ட சப் ஜூனியர் ரக்பி கால்பந்து போட்டிக்கு புதுக்கோட்டை மாவட்ட 14 வயதிற்குட்பட்ட அணியினர் பங்கு பெறுகின்றனர். போட்டியில் பங்குபெறும் அணியினரை தமிழக கூடைப்பந்து கழகத்தின் மாநில இணைச்செயலாளர் தாயுமானவன் புதுக்கோட்டை ரக்பி கால்பந்து கழகத்தின் பொருளாளர் சுரேஷ்குமார். தமிழக ரக்பி கால்பந்து கழகத்தின் மாநில இணைச் செயலாளர் குயின்டன். ரக்பி கழகத்தின் பொறுப்பாளர்கள், சிவா, விஜய், ரக்பி கால்பந்து பயிற்றுனர் சபரி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினர்.



அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பேரூராட்சி அலுவலகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ரமண சரஸ்வதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## சென்னை ராயபுரம் 50 வது வார்டில் போட்டியிடும் இளம் வழக்கறிஞர் சுயேட்சை வேட்பாளர் தீவிரபிரச்சாரம்



சென்னை, பிப். 19:

சென்னை உயர்நீதிமன்றம் மூத்த வழக்கறிஞரும் முன்னாள் ஜார்ஜ்டவுன் நீதிமன்ற தலைவரும், நோட்டரி பப்ளிக் ஒய் முகமது கவுஸ் மகன் வழக்கறிஞர் மு.அப்துல் முஜிப், சென்னை மாநகராட்சி கவுன்சிலர் தேர்தலில் 50 வது வார்டு உறுப்பினர் பதவிக்கு சுயேட்சையாக போட்டியிடுகிறார்.

நேற்று முன் தினம் மதியம் பிரசாரம் கடைசி நாள் என்பதால் ராயபுரம் தொகுதி 50 வது வார்டில் உள்ள பனைமர தொட்டி, மாதா கோவில் தெரு, பஜார் தெரு ,தெற்கு, வடக்கு ரயில்வே சாலை, டேங்க் தெரு, கிழக்கு மாதா கோவில் தெரு, ஆல்பர்ட் ஜேசுதாஸ் காலனி, காவலர் குடியிருப்பு, மரியதாஸ் தெரு, செட்டி தோட்டம், அம்மன் கோவில் தெரு, தாண்டவமூர்த்தி தெரு ,குமரப்பா தெரு, வடக்கு மாதாகோவில் தெரு ,தோஷி அடுக்குமாடி குடியிருப்பு, ஆண்டியப்ப தெரு, அப்பாவு தெரு வெங்கடேசன் தெரு, வண்ணார் தெரு , அனாதை குப்பம் குடிசைகள், உட்பட அந்த பகுதியில் உள்ள பொதுமக்களை சந்தித்து வழக்கறிஞர் அப்துல் முஜிப் வாக்குகளை கேட்டார்,

## உள்ளாட்சி தேர்தலையொட்டி திருவள்ளூரில் போலீசார் அணிவகுப்பு



திருவள்ளூர்,பிப்.19:

திருவள்ளூரில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை யொட்டி பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் நோக்கத்தில் காவல்துறை சார்பில் அணிவகுப்பு நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 19நகர்ப்புற உள்ளாட்சிதேர்தலுக்கான வாக்குப்பதிவு 19ம் தேதி நடைபெற உள்ளது. இதேபோல் திருவள்ளூர் நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் அமைதியாக நடைபெறவும்.பதற்றமான வாக்குச்சாவடிகளில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கவும் வலியுறுத்தி போலீசார் அணிவகுப்பு நடத்தினர்.

திருவள்ளூர் அம்பேத்கர் சிலை அருகே போலீசார் அணிவகுப்பு மரியாதையை மாவட்ட போலீசார் எஸ்பி வருண் குமார் உத்தரவின் பேரில் டிஎஸ்பி சந்திரதாசன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். இந்த அணிவகுப்பு ஆயில் மில் , நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம்,தேரடி வீதி,பஜார் குளக்கரை வீதி வழியாக காமராஜர் சிலை அருகே நிறைவடைந்தது.இந்த அணிவகுப்பில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சப் - இன்ஸ்பெக்டர்கள் மற்றும் மாவட்ட காவல் படையைச் சேர்ந்த 50 -க்கும் மேற்பட்ட காவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆலங்குடி பேரூராட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு எந்திர பெட்டிகள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைப்பு



ஆலங்குடி பிப். 19 –

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகாவில் உள்ள ஆலங்குடி, கீரமங்கலம் ஆகிய இரு பேரூராட்சிகளில் வார்டு உறுப்பினருக்கான தேர்தல் இன்று நடைபெற உள்ளது.

இந்நிலையில் நேற்று மாலை இரு பேரூராட்சிகளிலும் அந்தந்த செயல் அலுவலர்கள் பூவேந்திரன் மற்றும் போலிங் ஆபீசர் கட்சிகளின் வேட்பாளர்கள் பிஜேபி கிருஷ்ணமூர்த்தி திமுக கூட்டணியில் செங்கோல் மற்றும் சொர்ணகுமார் ஆகியோர் முன்னிலையில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு பெட்டிகள் வாக்கு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பாதுகாப்பு பணியில் ஆலங்குடி காவல் ஆய்வாளர் அழகம்மை மற்றும் மதுவிலக்கு காவல் ஆய்வாளர் குணமதி ராஜாமகமது ரவிச்சந்திரன் மற்றும் போலீசார் உடன் இருந்தனர்.




## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



மயிலாடுதுறை, பிப். 19;

மயிலாடுதுறை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் லலிதா தலைமையில் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில், ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மேலும்,வினாடிவினாப் போட்டியில் வெற்றிபெற்ற மருத்துவ மாணவர்களுக்கு பரிசுகளை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா வழங்கினார். ஸ்பர்ஷ் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு உரிய சிகிச்சைக்கு பின் குணமடைந்தவர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார்.

இதில், இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரகநலப்பணிகள்) மரு. ஆர்.மகேந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பி.பிரதாப், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு.எஸ். சங்கரி, மயிலாடுதுறை அரசு தலைமை மருதுவர் மரு.ஆர்.ராஜசேகர், காளி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஆர். சரத்சந்தர், மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.










புதுக்கோட்டை நகர்மன்ற 37 வது வார்டு உறுப்பினர் பதவிக்கு தென்னைமரம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் முருகலெட்சுமி தன்னுடைய இறுதி பிரச்சாரத்தை நிறைவுசெய்து அப்பகுதி பொது மக்களிடம் அவர் பேசுகையில்: தன்னை இப்பகுதி நகர்மன்ற உறுப்பினராக தாங்கள் தேர்ந்தெடுத்தால் நம்முடைய வார்டை அனைத்து அடிப்படை வசதிகளும் உடைய வார்டாக மாற்றி கொடுப்பேன். பொதுமக்களின் கோரிக்கையை தீர்க்கும் வகையில் வாரம் தோறும் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நடத்தப்பட்டு அவர்கள் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கொண்டுசென்று தீர்த்து வைப்பேன் என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

# கீழப்பனையூர் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நாளை நடைபெறுகிறது



*அரிமளம் பிப் 19:*

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியம் கீழப்பனையூர் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நாளை காலை 11 மணிக்கு நான்கு கால யாகா பூஜை வழியாக நடைபெற உள்ளது.

இதன் தொடக்கமாக நேற்று காலை கணபதி ஹோமமும் மாலை முதல் காலயாகபூஜை நடைபெற்றது. இதில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் கலந்துகொண்டு யாகசாலையை பார்வையிட்டு தீப ஆராதனையை ஏற்றுக்கொண்டார். இதில் கோயில் நிர்வாகி எம்.எஸ்.எம் சோமு கோயில் குருக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நாளை கும்பாபிஷேகம் முடிந்தவுடன் அறுசுவை அன்னதானம் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்துகொண்டு அம்பாள் அருள்பெறுமாறு நிர்வாகம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.






# உளுந்தூர்பேட்டை நகராட்சியில் வாக்கு இயந்திரங்கள் பாதுகாப்பாக வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன



*கள்ளக்குறிச்சி, பிப்,19_*

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் நடைபெற உள்ள 24 நகர்மன்ற வார்டு உறுப்பினர்கள் பதவிகளுக்கு 6 வாக்குச்சாவடி மையங்களில் உள்ள 25 வாக்கு பதிவு செய்யும் வாக்குச் சாவடிகளுக்கு தேவையானவாக்குப்பதிவு செய்யும் இயந்திரங்கள் மற்றும் தேர்தலுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் நேற்று மாலை உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்திலிருந்து தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையருமான சரவணன் தலைமையில் தேர்தல் மேற்பார்வையாளர்கள் முன்னிலையில் உதவித் தேர்தல் அலுவலர்கள் மற்றும் காவல்துறையினரின் பாதுகாப்புடன் அனைத்துவாக்குச்சாவடி மையங்களுக்கும் எடுத்துக் கொண்டு செல்லப்பட்டன.

மேலும் பாதுகாப்பு பணியில் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஜவகர்லால் தலைமையில் உளுந்தூர்பேட்டை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மகேஷ் மற்றும் காவல் நிலைய ஆய்வாளர் ராஜா, சீனிவாசன், போக்குவரத்துக் காவல் ஆய்வாளர் அப்பன்ராஜ் உள்பட காவலர்கள் 150 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.









Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பாக

# அலுவலருக்கான ஆட்சிமொழி கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது



கள்ளக்குறிச்சி, பிப்,19_

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பாக 17 மற்றும் 18 -ஆம்தேதி ஆகிய இரண்டு நாட்கள் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஆட்சிமொழி பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது.17-ஆம் தேதி அன்று நடைபெற்ற பயிலரங்கத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் சத்தியபிரியா வரவேற்புரை ஆற்றினார்,

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுரேஷ் தலைமையேற்று பயிலரங்கத்தைதொடங்கி வைத்தார். சேலம் மண்டலத்தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் .பவானி தொடக்க உரையாற்றினார் ஆட்சி மொழி வரலாறு-சட்டம், அரசு அலுவலகங்களில் கோப்பு நடவடிக்கைகள் குறித்தும் அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் என்ற தலைப்புகளிலும் பயிற்சியளித்தார். மேனாள் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் புலவர் ஆறுமுகம் மொழிப்பயிற்சி, மொழிப்பெயர்ப்பு கலைச் சொல்லாக்கம் ஆகிய தலைப்புகளிலும் பயிற்சியளித்தார்.

நேற்று கள்ளக்குறிச்சி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் சத்தியபிரியா ஆட்சி மொழிச் செயலாக்கம், அரசாணைகள் என்ற தலைப்பிலும் ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவும் நடவடிக்கைகளும் என்ற தலைப்பிலும், பயிற்சியளித்தார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர், 2019-ஆம் ஆண்டில் திருக்குறள் முற்றோதல் செய்த சங்கராபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 3 மாணவிகளுக்கும் ரூ.10 ஆயித்திற்கான காசோலை, பாராட்டுச்சான்றிதழ், மற்றும் அரசாணை ஒரு படி திருக்குறள் நூலும் பரிசாக அளித்து பாராட்டினார்.

தமிழ்நாடு அரசின் பாரதியார் விருதுபெற்ற பாவரசு பாரதி சுகுமாரன் மற்றும் எழுத்தாளர், தமிழ் இலக்கிய ஆய்வாளர் ஜெயக்குமாரி கருத்துரை வழங்கினார். கள்ளக்குறிச்சி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சரவணன் நன்றியுரை வழங்கினார். கள்ளக்குறிச்சி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் சத்தியபிரியா பொறுப்பேற்று ஒருங்கிணைத்து நடத்தினார்.

# திருமருகல் அருகே தீராத வயிற்றுவலியால் விவசாயி விஷம் குடித்து தற்கொலை

நாகப்பட்டினம், பிப்.19-

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் ஆலத்தூர் ஊராட்சி ஆலத்தூர் மேலத்தெருவை சேர்ந்தவர் கோவிந்தராஜ் மகன் கணேசன் (வயது 60) விவசாயி. இவர் கடந்த சில நாட்களாக தொடர் வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று காலை வழக்கம்போல் பணிக்காக சென்றுள்ளார். அங்கு அவருக்கு வயிற்று வலி அதிகமாகி உள்ளது.

வலிதாங்கமுடியாமல் வீட்டில் வைத்திருந்த விஷ மருந்தை குடித்து அங்கேயே மயங்கி கிடந்துள்ளார். அதனை கண்ட அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு காரைக்கால் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

அங்கு கணேசனை சோதித்தனர் டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறியுள்ளனர். இது குறித்த தகவல் அறிந்த திட்டச்சேரி போலீசார் இறந்த கணவனின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக அனுப்பி உள்ளனர் மேலும் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இறந்த கணேசனுக்கு தேவி (வயது 55) என்ற மனைவியும், ராஜசேகர் (வயது 27), அஜித் (வயது 25) என்ற 2 மகன்களும் உள்ளனர்.

மயிலாடுதுறையில் நிலப் பிரச்சினை தொடர்பாக

# ஏற்பட்ட தகராறில் விவசாயியை அடித்துக் கொன்ற ஆட்டோ ஓட்டுனருக்கு ஆயுள் தண்டனை

மயிலாடுதுறை , பிப்.19-

கொலை வழக்கில் ஒட்டுநருக்கு ஆயுள் தண்டனை விதித்து மயிலாடுதுறை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

மயிலாடுதுறை அருகே மாப்படுகை பிரதான சாலை பகுதியைச் சேர்ந்தவர் சேகர்(58) விவசாயியான இவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஒட்டுநர் பிரகாஷ்(49) என்பவருக்கும் இடையே நிலத்தகராறு தொடர்பான பிரச்னை இருந்துள்ளது. இந்நிலையில், கடந்த 2018-ஆம் ஆண்டு நவம்பர் 12-ஆம் தேதி அப்பகுதியில் உள்ள டீக்கடையில் சேகர் டீ குடித்துக் கொண்டிருந்தபோது, அவருக்கும், பிரகாஷ்க்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரமடைந்த பிரகாஷ் அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகு கட்டையை எடுத்து, சேகரை தாக்கியதில் அவர் படுகாயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை




▶ அரசு வழக்கறிஞர் ராமசேயோன், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் சுகுணாசிங், மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் செல்வம் உள்ளனர்.



▶ குற்றவாளி பிரகாஷ்

பலனின்றி சேகர் உயிரிழந்தார். இதுகுறித்து மயிலாடுதுறை போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து பிரகாஷை கைது செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த வழக்கு மயிலாடுதுறை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அரசு வழக்கறிஞர் ராமசேயோன் ஆஜராகிய இவ்வழக்கில் நீதிபதி பன்னீர்செல்வம் கொலை குற்றவாளி பிரகாசுக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1000 அபராதம் வித்து தீர்ப்பு வழங்கினார்.

மயிலாடுதுறையில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் தொடங்கப்பட்டு முதல் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து குற்றவாளி பிரகாசை போலீஸார் கைது செய்து திருச்சி மத்திய சிறைக்கு கொண்டு சென்றனர்.



▶ நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற உள்ளதையொட்டி, சேலம் மாவட்டம் கருப்பூர் பேரூராட்சி அலுவலகத்திலிருந்து வாக்குச்சாவடிகளுக்கு எடுத்துச் செல்ல தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கேன்கள் உள்ளிட்ட பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கார்மேகம் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



▶ திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜான் வெஸ்ட்ரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிவராசு நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# பாகிஸ்தானுக்கு முதன்முறையாக வந்த பில்கேட்ஸ்க்கு உயரிய குடிமகன் விருது



பாகிஸ்தான் , பிப்.19-

பாகிஸ்தான் நாட்டிற்கு முதன்முறையாக வருகை தந்த மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் பில் கேட்ஸுக்கு, அந்நாட்டின் இரண்டாவது உயரிய விருதான குடிமகன் விருது வழங்கப்பட்டது

போலியோ ஒழிப்பிற்கு சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக, பாகிஸ்தானின் இரண்டாவது மிக உயர்ந்த குடிமகன் விருதான 'ஹிலால்-இ-பாகிஸ்தான்' என்ற இந்த விருதை பில் கேட்ஸ்க்கு அந்த நாட்டின் அதிபர் ஆரிஃப் அல்வி வழங்கினார்.

பாகிஸ்தானுக்கு முதன்முறையாக சென்ற பில் கேட்ஸுக்கு பிரதமர் இம்ரான் கான் மதிய விருந்து அளித்தார். அதன் பின்னர் பேசிய பில் கேட்ஸ், பாகிஸ்தான் மற்றும் அதன் அண்டை நாடான ஆப்கானிஸ்தான் ஆகியவை போலியோ பரவும் உலகின் இரண்டு முக்கியமான நாடுகள். இந்த நாடுகளில் எடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகள் காரணமாக போலியோ ஒழிப்புவரும் ஆண்டுகளில் சாத்தியமாகும் என்று நம்புவதாக கூறினார்.



▶ தமிழ்நாடு அரசின் சார்பில், ம.சிங்காரவேலரின் 163வது பிறந்தநாளையொட்டி, சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் மகேசன் காசிராஜன், மாவட்ட கலெக்டர் ஜெ. விஜயா ராணி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வீ.ப. ஜெயசீலன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.




▶ புதுடெல்லியில் நேற்று கோதாவரி, கிருஷ்ணா, காவிரி நதிகள் இணைப்பு குறித்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய அரசின் ஜல்சக்தித்துறை செயலர் பங்கஜ் குமார் தலைமையில் நடைபெற்றது.



▶ திண்டுக்கல் மாவட்டத்தில் சாதாரண நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு திண்டுக்கல் மாநகராட்சி பகுதிக்காக திண்டுக்கல் அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தினை மாவட்ட தேர்தல் பார்வையாளர் அயலக நல்வாழ்வு நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் ஜெசிந்தா, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.விசாகன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# வாணியம்பாடி அருகே மாணவர்களை ஏற்றிச்செல்லாத அரசு பேருந்தை சிறைபிடித்த பொதுமக்கள்

வாணியம்பாடி, பிப்.19-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஜவ்வாது மலையில் 30-க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளது. இந்த கிராமத்தை சேர்ந்த பள்ளிக் கல்லூரி மாணவர்கள் ஆலங்காயம் மற்றும் வாணியம்பாடியில் படித்து வருகின்றனர்.

ஆனால் இந்த பகுதி வழியாக செல்லும் அரசு பேருந்துகள் மாணவர்களை ஏற்றி செல்வதில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறி அப்பகுதி மக்கள் அரசு பேருந்தை மறித்து போராட்டம் நடத்தினர். இவர்கள் ஆலங்காயம்-ஜமுனாமரத்தூர் சாலையை மறித்து



போராட்டம் நடத்தியதால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்த போராட்டம் குறித்து அறிந்த ஆலங்காயம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது இந்த பிரச்சனைக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்ததை தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டு அவர்கள் கலைந்து சென்றனர்.

# உலக மக்கள் நன்மை வேண்டி ஸ்ரீகாயத்ரி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் பௌர்ணமி சிறப்பு வழிபாடு

திருவள்ளூர் , பிப்.19-

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் வீ.எம்.ஜி பேலஸ் பின்புறம் ஈஸ்வரன் கோவில் தெருவில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீகாயத்ரி ஞானேந்திரர் சித்தர் பீடத்தில் உலக மக்கள் நன்மை வேண்டி பௌர்ணமி நாளை முன்னிட்டு சித்தர்கள் அடியான் குருஜி ஜெ. பூபாலன் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு காலையில் சிறப்பு யாகசாலை பூஜை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து மூலவர் சிவபெருமானுக்கு பால், தயிர், தேன்



போன்ற பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மூலவர் சிவபெருமானுக்கும், வாலைக்குமரி அம்மனுக்கும், ஸ்ரீகாயத்ரிதேவி அம்மனுக்கும், 18 சித்தர்களுக்கும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது

இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அவரவர் கோரிக்கையை ஏற்றார் போல் அகல் விளக்கேற்றியும் அர்ச்சனை செய்தும் நேற்றி கடனை பூர்த்தி செய்தனர் முடிவில் வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது

# இலங்கைக்கு கடத்தமுயன்ற 400 கிலோ கஞ்சா– நாகை மீனவர்கள் கைது

நாகப்பட்டிணம், பிப்.19-

நாகப்பட்டிணம் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு விசைப்படகின் மூலம் கஞ்சா கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த ரகசிய தகவலை அடுத்து தனிப்படை போலீசார் நாகை துறைமுகம் முழுவதும் தீவிரமாக சோதனை மேற்கொண்டனர். இந்த தீவிர சோதனையின் போது, ஒரு விசைப்படகின் அடிப்பகுதியில் 400கிலோ பதப்படுத்தப்பட்ட கஞ்சா இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து படகில் இருந்த ரூ.4 கோடி மதிப்புள்ள 400 கிலோ



கஞ்சவை பறிமுதல் செய்த போலீசார், கடத்தலில் ஈடுபட்ட 5 பேரை கைதுசெய்தனர். இந்த கஞ்சா கடத்தலில் மேலும் சில நபர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என சந்தேகம் அடைந்த போலீசார், தொடர்ந்து நாகை துறைமுகம் மற்றும் சுற்றுப்பகுதியில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் கடத்தலில் ஈடுபடுத்திய ரூ.20 லட்சம் மதிப்புள்ள விசைப்படகு மற்றும் கார், பைக் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# 2 குழந்தைகளை கொலை செய்து தற்கொலைக்கு முயன்ற பெண்ணுக்கு இரட்டை ஆயுள் தண்டனை

கடலூர் பிப்.19-

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலை சேர்ந்த வினோத். என்பவர் மனைவி சசிகலா(வயது 30).இவர்களுக்கு வரோகா (3), விஜயஸ்ரீ ( 3 மாத குழந்தை) என்ற 2 பெண் குழந்தைகள் இருந்தனர்.

இரண்டாவது குழந்தை பிறந்ததில் இருந்து சசிகலா உடல் நிலை சிரியில்லாமல் இருந்து வந்தார். பின்னர் அவரது உறவினர்கள் மருத்துவமனையில் வைத்து கவனித்தனர். இருப்பினும் அவருக்கு நோய் குணமடையவில்லை. இதனால் சசிகலா தற்கொலை செய்யும் முடிவுவை எடுத்து



உள்ளார். ஆனால் தான் இறந்த பிறகு குழந்தைகள் அனாதையாக ஆகிவிடும் என்பதால் முதலில் குழந்தைகளை கொலை செய்ய முடிவு செய்துள்ளார்

இதற்காக கடந்த 2018-ம் ஆண்டு வீட்டில் தனியாக இருந்த சசிகலா தனது இரண்டு குழந்தைகளையும் கழுத்தை நெரித்து கொலை செய்து விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்ய முயன்று உள்ளார். இதனை கண்ட உறவினர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்த காட்டுமன்னார்கோவில் போலீசார் சசிகலாவை கைது செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த வழக்கு கடலூர் மகளிர் கோர்ட்டில் நடந்து வந்து. தற்போது இந்த வழக்கின் அனைத்து விசாரணைகளும் முடிவடைந்த நிலையில் நேற்று நீதிபதி பாலகிருஷ்ணன் தீர்ப்பு வழங்கினார். அதில் கொடூரமான முறையில் 2 குழந்தைகளை கொலை செய்த சசிகலாவுக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், ரூ.2 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார்.

# காவேரி கூக்குரல் மூலம் 2 கோடி மரங்கள் நட திட்டம்





# நாகையில் பயங்கரம் 3 பேரை கொலை செய்து ஒருவர் தற்கொலை

# தமிழ்நாட்டில் இன்று நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறுகிறது




| சென்னை / புதுக்கோட்டை | 19.02.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.5 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

19.02.2022 சனி

புதுகை வரலாற்றில் இன்று

# பிறந்த நாள்



## பியான்ட் சிங்

இந்திய அரசியல்வாதி, பஞ்சாப் முதலமைச்சர்

(பி. 1922) (இ. 1995)

வரலாறு நாளிதழ்

# நினைவு நாள்



## கோபால கிருஷ்ண கோகலே

இந்திய மெய்யியலாளர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர்

(பி. 1866) (இ. 1915)

புதுகை

# வரலாறு

நாளிதழ்

# தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

## கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

## மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

### விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 22.02.2022

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்